# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2017

| தரம் - 09 | தமிழ்மொழி | 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

➢ இவ்வினாத்தாளுக்குரிய விடைகளை விடைத்தாளில் எழுதுக.
மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01) "கமலப்பள்ளி மேய வகையில் துஞ்சும் வெள்ளை அன்னம்" இங்கு கமலம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
(1) அல்லி (2) தாமரை (3) ஆம்பல் (4) முல்லை

02) 'சாளரங்கள் திரைவிலகிச் சந்திரக்கலை வாங்கும்' இங்கு சந்திரக்கலை என்பது குறிக்கும் பொருள்
(1) சூரியஒளி (2) ஒளி
(3) நிலாவொளி (4) சுக்கிரஒளி

03) புத்தபகவான் அகிம்சையைப் போதித்தார். இங்கு அகிம்சை என்பதன் எதிர்க்கருத்து
(1) சாத்வீகம் (2) உண்மை (3) மதம் (4) இம்சை

04) "ஆசை வெட்கமறியாது" என்பது முதுமொழி. இங்கு ஆசை என்பதன் எதிர்க்கருத்து
(1) பேராசை (2) நிராசை (3) ஆர்வம் (4) அவா

05) பகல், இரவு, நாள் என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
(1) எல் (2) அம்பு (3) கடல் (4) மலை

06) எருமையின் இளையது கன்று என்பது போல, சிங்கத்தின் இளையது
(1) பிள்ளை (2) போதகம் (3) குட்டி (4) குருளை

07) நிறுத்தக்குறிகளில் விளக்கிசைக் குறியைக் குறிப்பது
(1) ; (2) . (3) : (4) ( )

08) கணினியின் பகுதிகளில் Key Board ஒன்றாகும். Key Board என்பதன் கலைச்சொல்
(1) விசைப்பலகை (2) மென்பொருள்
(3) இணையம் (4) இறுவட்டு

09) ஒரே சமயத்தில் நூறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் பெற்றவன்
(1) அட்டாவதானி (2) சதாவதானி (3) சோடாவதானி (4) தசாவதானி

10) பின்வருவனவற்றுள் அடுக்கிடுக்குத் தொடராக வருவது
(1) அணுஅணு (2) பிடிபிடி (3) நடுநடுங்கி (4) பெரியபெரிய

11) சரியான வழிகாட்டி அமையாத சமூகம் திசைமாறிப் போகும். இதற்குப் பொருத்தமான உவமைத்தொடர்
(1) வலையில் சிக்கிய மான் போல
(2) அம்மி துணையாக ஆற்றில் இறங்கியது போல
(3) பசுமரத்தாணி போல
(4) மீகாமன் இல்லாத மரக்கலம் போல



kalvi.lk

12) தூரத்துப் பச்சை கண்ணிற்குக் குளிர்ச்சி என்ற கருத்துக்குப் பொருத்தமான வேறோர் பழமொழி

(1) அஞ்சினவன் கண்ணிற்கு ஆகாயமெல்லாம் பேய்

(2) கிட்ட இருந்தால் முட்டப் பகை

(3) இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை

(4) கிட்டாதாயின் வெட்டென மற.

13) அகச்சுட்டாய் அமையும் சொல்

(1) அவன் (2) உந்தப்பேனா (3) இக்குதிரை (4) இவ்வீடு

14) உயிர்மெய் நெட்டெழுத்துக்களின் எண்ணிக்கை

(1) 247 (2) 126 (3) 90 (4) 216

15) "கதவைத் தட்டுங்கள்" இவ்வாக்கியத்தின் எழுவாய்

(1) கதவு (2) நீ (3) தட்டு (4) நீங்கள்

16) மதிமுகம் எனபது எவ்வகை அணி

(1) உருவகம் (2) தற்குறிப்பேற்றம்

(3) உவமை (4) உயர்வு நவிற்சி

17) சே + அடி என்பதைப் புணர்த்தினால்

(1) சேவடி (2) செவ்வடி (3) சேஅடி (4) சேடி

18) பின்வருவனவற்றுள் இருபாற் பொதுப் பெயராக வராதது

(1) அதிபர் (2) நோயாளி (3) அகதி (4) மடந்தை

19) பின்வருவனவற்றுள் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாக வருவது

(1) வள்ளல் (2) செல்வம் (3) மஞ்ஞை (4) பக்கம்

20) பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி ஒரு பந்தியாக்குவதற்கான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

அ) அது பெரிய விருட்சமாகியது.

ஆ) கமலன் மரம் ஒன்று வெட்ட நினைத்தான்.

இ) மரத்தை வெட்டினான்.

உ) அதனருகே கன்றொன்றை நாட்டினான்.

ஈ) முதலில் மரக்கன்றைக் கொண்டு வந்தான்.

(1) ஆ, ஈ, உ, அ, இ (2) ஆ, இ, ஈ, உ, அ

(3) ஆ, ஈ, இ, உ, அ (4) ஈ, ஆ, உ, இ, அ

**(20x1 ½ = 30 புள்ளிகள்)**



kalvi.lk

## பகுதி – II

**1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் வினாக்களுக்கும், 5ஆம், 6ஆம், 7ஆம் வினாக்களில் ஒன்றையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) உமது வகுப்பறையில் மேற்கொள்ளப்பட்ட "ஒப்படை" கணிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

(1) இக்கணிப்பீட்டிற்கு ஆசிரியரால் வழங்கப்பட்ட தலைப்பு யாது?
(2) இக்கணிப்பீட்டிற்காக ஆசிரியரால் வழங்கப்பட்ட ஆலோசனைகள் இரண்டு எழுதுக.
(3) இக்கணிப்பீட்டிற்கான தகவல்களை எவ்வாறு பெற்றுக்கொண்டீர்?
(4) இக்கணிப்பீட்டின் மூலம் பெற்றுக்கொண்ட பயன்கள் 4 எழுதுக.

**(2+2+4+4=12 புள்ளிகள்)**

02) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

(1) தாய்மொழியாம் தமிழ்மொழியின் சிறப்புக்கள்
(2) மனித வாழ்வில் விஞ்ஞானம்
(3) நாட்டார் பாடல்களின் சிறப்புக்கள்
(4) முறிந்த வேப்பமரம் ஒன்றின் சுயசரிதை

**(18 புள்ளிகள்)**

03) பின்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து 75 சொற்களுக்குக் குறையாது எழுதுக.

அ) பொலித்தீன் பாவனையைத் தடுப்பது தொடர்பான துண்டுப்பிரசுரம்.

ஆ) உமது பாடசாலையில் நடைபெற்ற "தமிழ்விழா" பற்றிய அறிக்கை.

**(15 புள்ளிகள்)**

04) (i) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(1) மாதரும் மலர்ப்பொய்கையும் என்ற பாடத்தில் கிளியின் மதிநுட்பம் யாது?
(2) பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை இயற்றிய நான்கு நூல்கள் தருக.
(3) விஞ்ஞானம் பற்றி தாமஸ் கூறியுள்ள கருத்தைத் தருக.
(4) வெளிச்சம் எனும் கவிதையில் நாட்டின் இருள் நீங்கி நீதி எப்போது கிடைக்கும் எனக் கூறப்பட்டுள்ளது?
(5) முதுமொழிமாலை எனும் நூலின் ஆசிரியர் யார்?

**(5x3=15 புள்ளிகள்)**

05) பின்வரும் பாடலை வாசித்துக் கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

ஒருநாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்
இரு நாளுக்கு ஏல் என்றால் ஏலாய் - ஒரு நாளும்
என் நோவு அறியாய் இடும்பைகூர் என் வயிறே.
உன்னோடு வாழ்தல் அரிது.

1. இப்பாடல் எதனைப் பற்றிப் பாடப்பட்டுள்ளது?
2. ஒரு நாள் எதனை ஒழிக்கச் சொன்னால் ஒழிக்கமாட்டாய் எனக் கூறப்படுகின்றது?
3. ஒரு நாளும் தனது எதை அறியமாட்டாய் என கவலைப்படுகின்றார்?
4. இடும்பை என்பதன் ஒத்தபொருள் யாது?
5. பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்து தருக.

அரிது –

வாழ்தல் -

(5x2=10 புள்ளிகள்)



kalvi.lk

06) பின்வரும் பந்தியை வாசித்து இதன்கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

நாம் எமது உலக வாழ்க்கையில் இரண்டு விடயங்களைக் கூர்ந்து அறிய வேண்டியுள்ளது. அதாவது ஒன்று பணக்காரன் எப்படி உழைத்தான் என்பதை ஏழை அறிய வேண்டும். இரண்டாவது ஏழை எப்படி வாழ்கிறான். என்பதை பணக்காரன் அறிய வேண்டும். இவை இருவரையும் இரு பகுதியினரும் அறிந்தால் தான் நடுவில் உள்ள எம்மைப் போன்ற மத்திய தரப்பினர் வாழ இலகுவாக இருக்கும். ஏழையும் பணக்காரனின் உழைப்பு முன்னேற்றத்தைப்போல் தானும் முன்னேற முடியாதா என்பதை உணர முடியும். அதேபோல் தான் பணக்காரனும் ஏழை எப்படி வாழ்கிறானென்பதை உணர்ந்து தானும் இசைந்து வாழமுடியும்.

1. உலக வாழ்வில் ஏழை எதை அறிய வேண்டும்?
2. பணக்காரன் எதை அறியவேண்டும்?
3. இரண்டு விடயங்களையும் அறிந்தால் யார் வாழ இலகுவாக இருக்கும்?
4. பணக்காரன் ஏழையின் வாழ்வை ஏன் அறியவேண்டும்?
5. பின்வரும் சொற்களின் எதிர்ச்சொற்களைத் தருக.
    1. ஏழை –
    2. வாழ்வு –

(5x2=10 புள்ளிகள்)

07) பின்வரும் தொடர்களின் பொருள் விளங்க வாக்கியங்கள் அமைக்குக.

(1) கண்ணீரும் கம்பலையும்
(2) அல்லும் பகலும்
(3) விடிய விடிய
(4) கிணற்றுத் தவளை போல
(5) மெல்ல மெல்ல

**(5x2=10 புள்ளிகள்)**



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான
மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில
மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி Kalvi.lk

Whatsapp
075 287 1457